# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

## OS.NO. 92/2014

**Deposition of Witness : PW- 1**

**Name** : தீனதயாளு

**Father Name /W/o** : த/பெ.கோவிந்தராஜலு

**Religion** : இந்து

**Caste** : -

**Calling** : வியபாரம்

**Address** : அரக்கோணம்.

**Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 27.06.2023.**

குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் 9 முதல் 13 தரப்பில்)

1. எந்த சொத்தின் மீது வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆத்தூர் கிராமம். சர்வே எண்.340/2, விஸ்திரணம் 4.22 ஏக்கர். நான் அந்த சொத்திற்க வழக்கு போடவில்லை என்றாலும், பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதலில் சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் ராஜம்மாள் மற்றும் பலராமனுக்கு சொந்தமானது. தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமை என்றால் நான் பிரதிவாதிகள் 1 மற்றும் 2ன் பொது அதிகார முகவர் ஆவேன். நான் பொது அதகார முகவர் என்பதால் அந்த சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றால் சொத்தை வாங்க விற்க, எனக்கு உரிமை உள்ளது.

2.அவர்களுக்காக நான் வேலை செய்ய தான் எனக்கு உரிமை பொது அதிகார பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சொத்தை பொறுத்து அனைத்து வேலைகளும் செய்வதற்கு எனக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல சட்டப்படியான உரிமை உள்ளது. 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் எதற்காக எனக்கு பொது

அதிகாரம் கொடுத்தார்கள் என்றால் மனைகளாக பிரித்து அங்கிகாரம் பெற்று விற்பனை செய்து தருவதற்காக கொடுத்தார்கள். முதல்வா் கூறியது போல் மனைகளாக பிரித்து விற்பனை செய்தேனா என்றால் ஆம். ஒவ்வொரு மனைக்கும் தனித்தனியாக சா்வே எண் உட்பிரிவு செய்யப்பட்டு இருக்கும் என்றால் ஆம். தனித்தனியாக உட்பிரிவு செய்யப்பட்டதற்கான சா்வே எண்ணை தாவாவில் குறப்பிடவில்லை என்றால் சரியல்ல. டி.டி.பி அங்கீகாரம் பெறும் போது முழு சா்வே எண் தான் குறிப்பிடப்படும்.

3. முதல்வா் சொன்ன வேலையை நான் செய்த முடித்து விட்டேன் என்றால் ஆம். பொது அதிகாரத்தின்படி எனக்கு கொடுத்த வேலையை நான் செய்து முடித்து விட்டேன் என்றாலும், எனக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும், அந்த பொது அதிகாரத்தை வைத்து எந்த உரிமையும் கோர முடியாது என்றால் நான் விற்பனை செய்து கொடுத்தவா்களுக்காக நான் வழக்கு போட்டுள்ளேன். மனைகளை வாங்கியவா்கள் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் முதல்வரை தான் கேட்பார்கள் என்றால் சரியல்ல. மனைகளை வாங்கியவா்கள் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் நீதிமன்றத்தை நேரடியாக அனுகலாம் என்றால் ஆம். ஆனால் பிரச்சனை என்றால் என்னை தான் கேட்பார்கள். எனக்கும் முதல்வருக்கும் இடையிலான கணக்கு வழக்குகளை எப்போது முடித்தேன் என்றால் 2007ல் முடித்தேன். அதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் விற்பனை செய்ததற்கு எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 40 ஆவணங்கள் இருக்கும். அந்த ஆவணங்களில் உள்ள சொத்துக்கள் எனக்கு சொந்தமானவை இல்லை என்பதால் அதை தாக்கல் செய்ய எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்யவும் எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. அதிகாம் உள்ளது. நான் கேட்டுள்ள பரிகாரம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.